**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No.40/2024**

**2025**ம் வருடம் ஜுலை திங்கள் 09ம் நாள் 2ம் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திருமதி.சேதுராணி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திருமுருகன் (PW1) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>வாதி தரப்பில் முதன்மை விசாரணை</u>:

1. நான் இவ்வழக்கின் 2ம் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள பிராத்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. தாவா சொத்தினை 1ம் வாதி கடந்த 31.05.1996ம் தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு 1ம் வாதியின் முன்பாத்தியஸ்தரிடம் இருந்து கிரையம் பெற்றதற்கான கிரையம் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகும்.

3. தாவா சொத்திற்கு கடந்த 29.10.2009 கடலாடி வட்டாட்சியரிடமிருந்து வாதி பெயரில் பெறப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் வா.சா.ஆ.2 ஆகும்.

4. கடந்த 21.07.2011ம் தேதி தாவா சொத்திற்கு 1416ம் பசலி முதல் 1421ம் பசலி வரை வரி செலுத்தியதற்கான வரி இரசீது (எண்ணம் –2) அசல் வா.சா.ஆ.3 ஆகும்.

5. கடந்த 1981ம் வருடம் மார்ச் மாதம் 23ம் தேதி தாவா சொத்தினை தெற்கு மாலாக காட்டடப்பட்டு 1ம் வாதியின் முன் பாத்தியஸ்தரின் பங்காளிகள் வேலுத்தேவர் மகன் பால்சாமிக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரத்தின் SRO நகல் அசல் வா.சா.ஆ.4 ஆகும்.

6. கடந்த 1987ம் வருடம் ஜீன் மாதம் 15ம் தேதி தாவா சொத்தினை வடக்கு மாலாக காட்டடப்பட்டு வேலுத்தேவர் மகன் பால்சாமிக்கு மூக்கையா என்பவர்

எழுதிக்கொடுத்த கிரையபத்திரத்தின் SRO நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

7. கடந்த 1995 ம் வருடம் ஜீன் மாதம் 19 ம் தேதி தாவா சொத்தினை தெற்கு மாலாக காட்டப்பட்டு பால்பாண்டி என்பவருக்கு வேலம்மாள் என்பவர் எழுதிக்கொடுத்த கிரையபத்திரத்தின் SRO நகல் அசல் வா.சா.ஆ.6 ஆகும். ( 4, 5, 6 ஆவணங்களானது 3 ம் தரப்பினர் ஆவணம் என்பதால் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

8. நீதிமன்ற ஆணையரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 ஆகும்.

9. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ.2 ஆகும்.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி